**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெருந்துறை**

**முன்னிலை : திரு.என்.மூர்த்தி, B.Com.,B.L.,**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், பெருந்துறை**

**2026 ம் வருடம் மார்ச் திங்கள் 30 ம் நாள் திங்கள்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 16 ம் நாள்**

**<u>சுருக்குமுறை விசாரணை வழக்கு எண். 662/2025</u>**

<u>CNR NO.TNED120028492025</u>

அரசுக்காக : உதவி ஆய்வாளர், பெருந்துறை

காவல் நிலைய குற்ற எண். 231/2025

சட்டப்பிரிவுகள் U/S. 281, 324(4) BNS. ... குற்றம் முறையிடுபவர்

-எதிர்-

ராஜா (36),

த/பெ. கணேசன்,

க.எண். 6/68/1, ஆட்டுக்காரங்காடு,

அன்னதானப்பட்டி, சேலம். ... குற்றம் சாட்டப்பட்டவர்

CASE SUMMARY

| Sl.No. | Questions | Reply |
|---|---|---|
| 1. | The period of remand of the accused | Not remanded |
| 2. | The date of filing of the final report in the court | 08.09.2025 |
| 3. | The date of committal of the case to the Court of Session | Not applicable |
| 4. | The date of questioning of the accused under sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure 1973, as the case may be | 30.03.2026 |
| 5. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts, except routine petitions the petition under Section 317 of the code | Nil |
| 6. | Date of examination of the accused under Section 313 of the Code | Nil |
| 7. | Details of abscondance accused and his appearance production, as the case may be and | Nil |
| 8. | Grant of stay by superior Courts and the results thereof | Nil |

இவ்வழக்கு இறுதியாக கடந்த 30.03.2026 ம் தேதி விசாரணைக்கு வரப்பட்டு, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் செல்வி P.ஜெயந்தி அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. பிரியா அவர்கள் ஆஜராகியும் வழக்காடியதில் இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும் வழக்கு கோப்புகளை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

N MOORTHY

Digitally signed by N MOORTHY
Date: 2026.03.30 17:54:23 +0530

-**<u>தீர்ப்புரை</u>**-

**<u>1. வழக்கின் சுருக்கம்</u>** :

கடந்த 06.04.2025 ம் தேதி அதிகாலை 2.45 மணிக்கு பெருந்துறை காவல் நிலைய சரகம் பெருந்துறை - குன்னத்தூர் ரோடு மலை சீனாபுரம் சாலை ஓரத்தில் தமிழ்நாடு அரசு நீர்வளத்துறை சார்பில் அத்திக்கடவு அவிநாசிதிட்டம் மூலம் ஈரோடு, திருப்பூர் மற்றும் கோயமுத்தூர் மாவட்டங்களில் உள்ள குளம் குட்டைகளுக்கு நீர் வழங்கப்பட்டு வரும் பிரதான குழாயின் வால்வு மீது எதிரி TN 77 P 8989 பதிவெண் கொண்ட லாரியை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று மோதி விபத்தை ஏற்படுத்தியதின் காரணமாக பைப் லைன் மற்றும் வால்வு ஆகியவற்றின் சேதமதிப்பு ரூ.60,210/- அதற்கான சிவில் வேலைகள் செய்ய ரூ.42,100/- என ஆட்கள் கூலி இன்றி மொத்தம் ரூ.1,02,310/- அளவுள்ள அரசு சொத்துக்கு எதிரி சேதம் விளைவித்ததாகவும், அதனால் எதிரி சட்டப்பிரிவுகள் U/S. 281, 324(4) BNS ன் படி தண்டிக்கப்பட வேண்டியவர் என்று பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்ற அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களையும் குற்ற அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும் பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிக்கு எதிராக புலன் கொள்ளக்கூடிய குற்றங்கள் விசாரணைக்கு எடுக்க முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் U/S. 281, 324(4) BNS ன் படியான குற்றத்தை விசாரணைக்கு எடுத்து சட்டப்பிரிவு 210 (1) (b) BNSS ன் படி உத்தரவிடப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. குற்றஞ்சாட்டப்பட்டவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழக்கில் உள்ள ஆவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 230 BNSS ன் படி இலவசமாக வழங்கப்பட்டன. எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு எதிரி மீது சட்டப்பிரிவுகள் U/S. 281, 324(4) BNS வின் படி குற்றச்சாட்டு வனையப்பட்டு விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. பின்னிட்டு எதிரியிடம் குற்றத்தை பற்றி



N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.03.30 17:54:33 +0530

வினவியபோது எதிரி குற்றத்தை தம்மிச்சையாக ஒப்புக்கொண்டு குற்ற ஒப்புதல் மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

4. வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கின் படிக்கு கடந்த 06.04.2025 ம் தேதி அதிகாலை 2.45 மணிக்கு பெருந்துறை காவல் நிலைய சரகம் பெருந்துறை - குன்னத்தூர் ரோடு மலை சீனாபுரம் சாலை ஓரத்தில் தமிழ்நாடு அரசு நீர்வளத்துறை சார்பில் அத்திக்கடவு அவிநாசிதிட்டம் மூலம் ஈரோடு, திருப்பூர் மற்றும் கோயமுத்தூர் மாவட்டங்களில் உள்ள குளம் குட்டைகளுக்கு நீர் வழங்கப்பட்டு வரும் பிரதான குழாயின் வால்வு மீது எதிரி TN 77 P 8989 பதிவெண் கொண்ட லாரியை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று மோதி விபத்தை ஏற்படுத்தியதின் காரணமாக பைப் லைன் மற்றும் வால்வு ஆகியவற்றின் சேதமதிப்பு ரூ.60,210/- அதற்கான சிவில் வேலைகள் செய்ய ரூ.42,100/- என ஆட்கள் கூலி இன்றி மொத்தம் ரூ.1,02,310/- அளவுள்ள அரசு சொத்துக்கு எதிரி சேதம் விளைவித்ததை எதிரி ஒப்புக் கொண்டுள்ளார். எதிரியின் தம்மிச்சையான குற்ற ஒப்புதலை ஏற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்ததிலும் எதிரியை சட்டப்பிரிவுகள் U/S. 281, 324(4) BNS ன் படி குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

5. எதிரி தன் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் எதிரி மீது சுமத்தப்பட்ட சட்டப்பிரிவுகள் U/S. 281, 324(4) BNS ன் கீழான குற்றச்சாட்டுக்குண்டான குற்றத்திற்கு குற்றவாளி என தீர்மானித்து எதிரி சமுதாயத்தில் மீண்டும் திருந்தி வாழ்ந்து அவரது வாழ்க்கையை புனரமைத்துக் கொள்ள வேண்டுமென்ற சிந்தனையின் படியும், எதிரியின் முதன்முறை குற்றவாளி என்பதை கருத்திற் கொண்டும், எதிரியின் குடும்ப சூழ்நிலையை கருத்திற் கொண்டும், நீதியின் நலனை கருத்திற்கொண்டும் எதிரிக்கு இந்நீதிமன்றம் சிறை தண்டனை வழங்காமல் அபராத தொகை மட்டும் செலுத்த உத்தரவிடலாம் என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

N MOORTHY

Digitally signed by N MOORTHY
Date: 2026.03.30 17:54:42 +0530

6. தீர்ப்பின் முடிவாக எதிரிக்கு எதிரான சட்டப்பிரிவுகள் U/S. 281, 324(4) BNS ன் கீழான குற்றச்சாட்டுக்களுக்குண்டான குற்றத்திற்கு குற்றவாளி என தீர்மானித்து எதிரிக்கு சட்டப்பிரிவு 281 BNS ன் படியான குற்றத்திற்கு அபராதம் ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) விதித்தும், சட்டப்பிரிவு 324(4) BNS ன் படியான குற்றத்திற்கு அபராதம் ரூ.25000/- (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) விதித்தும், எதிரி அபராத தொகையை கட்டத்தவறினால் எதிரிக்கு தலா ஒரு வாரம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்து சட்டப்பிரிவு 275 BNSS ன் படி தீர்ப்பளிக்கப்படுகிறது. மொத்த அபராதத்தொகை ரூ. 26,000/- (ரூபாய் இருபத்தாராயிரம் மட்டும்)

7. வழக்கு சொத்து எதுவும் ஆஜர்படுத்தப்படவில்லை.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ம் நாள் இன்று என்னால் சரிபார்க்கப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.03.30 17:54:49 +0530

நீதித்துறை நடுவர்,

பெருந்துறை.

**இணைப்பு**

அரசு தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் சான்றுப் பொருட்கள் - இல்லை

எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் சான்றுப் பொருட்கள் - இல்லை

**பின்குறிப்பு:**

1. எதிரி பிணையில் இருந்து வருகிறார்.

2.வழக்கின் முடிவு காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

3.தீர்ப்பின் நகல் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

N MOORTHY Digitally signed by N MOORTHY Date: 2026.03.30 17:54:54 +0530

நீதித்துறை நடுவர்,

பெருந்துறை.